# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

**கூட்ட எண்.47/2019** **நாள். 30.09.2019**

## தனி அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

30.9.2019ம் நாள் திங்கள்கிழமை காலை 11.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் செப்டம்பர் 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | செப்டம்பர் 2019 | 0 | 0 | 12 | 5 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் பிரண்டர்கள் அதனை சார்ந்த உபகரணங்கள் ஓர் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படியான ஒப்பந்த பணிக்காலம் ஜுலை 2019 மாதம் இறுதியில் முடிவடைவுள்ளதால் ஆகஸ்ட் 2019 ம் மாதம் ஓர் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள 24.9.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | நிறுவனத்தின் பெயர் | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|
| 1 | கணினிகள் மற்றும் பிரண்டர்கள் அதனை சார்ந்த உபகரணங்கள் பராமரிப்பு பணிகள் செய்தல் | மெசஸ். இன்காம் சொலுசன்ஸ்<br>மெசஸ். எஸ்ஆர்டி டாடா சொலுசன்ஸ் | குறைவு<br>அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மேற்படி நிறுவனத்தின்குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>பொருள் எண். 4</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றிற்கான கட்டணங்கள் நகர மன்ற தீர்மானம் எண். 506 நாள் 07.03.2019 ல் 01.04.2019 முதல் வசூல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தமிழ் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்து வெளியிட கோரி இவ்வலுவலக கடிதம் ந.கஎண்.293/2019/எப்1 நாள்.24.06.2019ல் மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 10.07.2019அன்று மாலை மலர் நாளிதழில் கட்டண விவரம் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எவ்வித ஆட்சேபணை வரப்பெறவில்லை. எனவே, மேற்படி கட்டண விவரப் பட்டியலை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து வெளியிடவும் அதற்கு ஆகும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** கட்டண விவரப் பட்டியலை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து வெளியிடவும் அதற்கு ஆகும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.5</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 28 அவர்களின் 24.09.2019 தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சிகளில் 2500 சதுர அடி பரப்பளவிற்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் கள ஆய்வின்றி எளியமுறையில் ஆவணங்களின் அடிப்படையில் இனயதள வாயிலாக கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்க அரசாணை நிலை எண்.110 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.21.08.2019ல் உத்திரவிடப்பட்டுள்ள மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 6</u>**

தமிழ்நாடு உள்ளாட்சிகளில் விளம்பரங்கள் / விளம்பர பலகைகள் முறைப்படுத்துதல் , வரிவிதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள், திருத்தங்கல் அரசாணை ( 4 D ) எண்.2 நாள்.05.06.2018 ல், நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை MC 1 ல் வெளியிடப்பட்டு அரசாணையின்படி அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.2868/2018/டிபி2 நாள்.14.02.2019 மற்றும் 05.08.2019.ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

<u>பொருள் எண். 7</u>

இந்நகராட்சிக்கு போதிய பணியிடங்கள் தோற்றிவிக்கப்படாத நிலையில் அவ்வபோது அலுவலக பணிகள் மேற்கொள்வதில் தோய்வு ஏற்படுகிறது. அவசர அவசிய பணிகள் குறித்த அறிக்கைகள் அனுப்புவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில் தட்டச்சு பணியிடம் தோற்றிவிக்கப்படவில்லை, தட்டச்சர் யாரும் இல்லை என்பதாலும், போதிய அளவில் இளநிலை உதவியாளர் பணியிடம் தோற்றிவிக்கப்படவில்லை என்பதால் பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. நிர்வாக நலன் கருதி பணிகளை உடனுக்குடன் முடிக்க 2 பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 11.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6வா வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்டிற்கு) | |
| 1. | இந்நகராட்சிக்கு 2 நபர்கள் தட்டச்சுடன் இளநிலை உதவியாளர் பணிகளை மேற்கொள்ளுதல் . | 529.00 | 535.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசஸ்.பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண். 8</u>

அனகாபுத்தூர் நகராட்சி அலுவலக அனைத்து பிரிவில் உள்ள கணிணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கணிணிகள் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் பயன்படுத்த நிலை ஏற்படுகிறது. எனவே புதியதாக 5 எண்கள் கணிணி, 2 எண்கள் பிரிண்டர் மற்றும் அதனை சார்ந்த உபகணங்கள்வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.500000/-ற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

அனகாபுத்தூர் நகராட்சிக்கு 2018-19ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்று முடிவுற்றது. தணிக்கை ஆய்வு மேற்கொண்ட தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர பணிகள் 50% தணிக்கை கட்டணமாக நகராட்சி நிதியிலிருந்து ரூ. 105000/-த்தை அரசு தலைப்பு கணக்கில் செலுத்த நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கபடுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.10**

**25.09.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | லஷ்மி நகர் நான்காவது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.90 | எம்.நித்தியானந்தம்<br>ஜி.சுரேஷ் | 4.70 % அதிகம்<br>5.55 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு : 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2.மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை மன்றம் ஏற்கலாம்.
3.பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.11**

**20.09.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் எதிர்வரும் பருவ மழையினை எதிர்நோக்கி வடிகால், சிறுபாலம் தூர்வாரி அப்புறப்படுதத்துல் பணி | 5.00 | மெசஸ்.ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>மெசஸ்.எஸ் வி பி எலக்ட்ரிகல்ஸ் | 0.15 % குறைவு<br>1.60 % அதிகம் |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சியில் அம்மா உணவகத்திற்கு குளிர் சாதன பெட்டி மற்றும் கிரைண்டர் வாங்குதல் பணி | 0.90 | 1 ஜிபிபிஎஸ் ஐடி சொலுசியன்ஸ்<br>டி.ஜே. எண்டர்பிரைசஸ் | 0.10% குறைவு<br>1.50 %அதிகம் |

**அலுவலகக்குறிப்பு : 1.** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
**2.**பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.12**

**06.09.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.5 பெரியார் தெரு மற்றும் வார்டு எண்.4 கண்ணகி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.50 | எம்.நித்தியானந்தம்<br>எம்.ஆஷா | 0.15 % குறைவு<br>1.60 % அதிகம் |
| 2. | வார்டு எண்.4 பல்லவன் தெரு பகுதி மற்றும் 1வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.50 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | 0.10% குறைவு<br>1.50 %அதிகம் |
| 3. | வார்டு எண்.4 பல்லவன் தெரு பகுதி மற்றும் 2வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 6.50 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | 0.10% குறைவு<br>1.80 %அதிகம் |

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பஜார் தெருவில் நகராட்சி மூலம் சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு பிப்ரவரி 2019 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்நகர் மன்ற தீர்மான எண்.380 நாள்.31.07.2018ல் நிர்ணயிக்கப்பட்ட விலை பட்டியலுடன், சேவை வரியும் சேர்த்து கட்டணங்கள் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>கட்டண பட்டியல்</u>

| வ.எண் | விவரம் | வைப்புத் தொகை | வாடகை கட்டணம் | குடிநீர் கட்டணம் | மின்சார கட்டணம் | சேவை வரி |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருமணம் (திருமணத்திற்கு முந்தைய நாள் பிற்பகல் 2.00 மணி முதல் திருமண நாள் பிற்பகல் 2.00 மணி வரை) | 5,000/– | 10,000/– | 1,000/– | ஒரு யூனிடிற்கு ரூ.13.00/– | அவ்வப்போது அரசு நிர்ணயம் செய்யம் சேவை வரி |
| 2. | திருமண வரவேற்பு, பிறந்த நாள் விழா, காதணி விழா மற்றும் மஞ்சள் நீராட்டு விழா (காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை) | 5,000/– | 7,500/– | 750/– | ஒரு யூனிடிற்கு ரூ.13.00/– | |

<u>அலுவலகக்குறிப்பு</u>: அட்டவணையில் கண்டுள்ள கட்டணங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.**நிகழ்ச்சி நடைபெறாத / இரத்து செய்யும் பட்சத்தில் பயனீட்டாளர் செலுத்திய வாடகை கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கலாம்.
**3.**மின் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் மண்டபத்திற்கு சேதம் ஏற்பட்டால் அதற்குண்டான தொகையினை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, மீதம் உள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்கலாம்.
**4.**நகராட்சி பணியாளர் நிகழ்ச்சி நடத்துவதற்கு வாடகை கட்டணம் மற்றும் வைப்புத் தொகையில் **50** சதவீதம் மட்டும் செலுத்த மன்றம் அனுமதியளிக்கலாம்.
**5.**வாடகை கட்டணத்துடன், அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் சேவை வரியையும் சேர்த்து பயனீட்டாளரிடமிருந்து வசூல் செய்ய மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

அனகாபுத்தூர் நகராட்சி **2019–2020**ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் **18** துப்புரவு பணியாளர்கள் மற்றும் **1** ஓட்டுநர்களுக்கு காலனிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதால், காதி கிராப்ட் நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**20000/–**க்கு நகரமன்றத்தின் அனிமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

அனகாபுத்தூர் நகராட்சி **2019–2020**ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் **18** துப்புரவு பணியாளர்களுக்கு சோப்பு வாங்கி வழங்க வேண்டியுள்ளதால், மாதம் **1** சோப்பு வீதம் **12** மாதத்திற்கு **240** சோப்பு காதி கிராப்ட் நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**10000/–**க்கு நகரமன்றத்தின் அனிமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.16</u>

அனகாபுத்தூர் நகராட்சி **2019–2020**ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர், ஓட்டுநர்கள், துப்புரவு மேற்பார்வையாளர், பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு ஓட்டுநர், வால்வு இயக்குபவர், பொருத்துனர் மற்றும் மின்பணி உதவியாளர் பொது பிரிவில் உள்ள அலுவலக உதவியாளர் பணிபுரியும் பணியாளர்களுக்கு சீருடைகள் வாங்கி வழங்கவும் அதற்கான அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தையல் கூலி வழங்குதல் உட்பட தோராய செலவினம் ரூ.**50000/–**க்கு நகரமன்றத்தின் அனிமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி